விலை: சதம் 60

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 12 ஷஃபான் 23 இதழ் 132

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-6-1981

## "இலங்கைத் தேர்தல்கள் நேர்மையாக நடைபெறுவதை உறுதிப்படுத்த சுதந்திர அவதானி தேவை"

### பொதுநல அரச எம். பி. க்களிடம் கூட்டணி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"இலங்கையிலே சர்வஜன வாக்குரிமையின் ஐம்பதாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொண்டாட்டங்களுக்கு சற்று முன்னதாக, இந்த உரிமைக்கே பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் அரசு இயந்திரம் தாராளமாக பயன்படுத்தப்பட்டமை மிக வேடிக்கையானதே".

இவ்வாறு நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு மு. சிவசிதம்பரமும் 9 கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் கைச்சாத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள இந்த அறிக்கை, சர்வஜன வாக்குரிமையின் 50-வது வருடாந்தப் பூர்த்தியை முன்னிட்டு பொதுநலவரசு நாடுகளின் பாராளுமன்றச் சங்கத்தின் இலங்கைக்கிளை ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கில் பங்குபற்ற வந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

எதிர்காலத்திலே இலங்கையில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் நேர்மையான முறையில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக சார்பற்ற, சுதந்திர அவதானி ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்று இலங்கை அரசாங்கத்துக்கு சிபார்சு செய்யுமாறு இந்தப் பிரதிநிதிகளை கூட்டணியாளர் அறிக்கை கோருகின்றது.

வடபகுதியிலே நிகழ்ந்த நாசங்களை நேரிலே வந்து பார்க்குமாறும் கூட்டணியினர் பொதுநலவரசு பாராளுமன்ற மகாநாட்டுப் பிரதிநிதிகளைத் துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளனர். [கு

# 'எங்கள் விடயங்களில் பிரிட்டிஷ் எம்.பிக்கள் தலையிட வேண்டாம்

## உங்கள் அலுவல்களை நீங்கள் கவனியுங்கள்'

### யாழ். வன்செயல்கள் விவகாரம்: சர்வதேச கருத்தரங்கில் ஜே. ஆர்.

(நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

"யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக, பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலிருந்து பல கடிதங்களும், தந்திகளும் எமக்குக் கிடைத்துள்ளன. இவை யாவும், அடிப்படை உண்மை தெரியாமல் அனுப்பப்பட்ட கண்டனங்களாகும். நான் இவர்களுக்குக் கூறுகின்றேன்;

"நீங்கள் உங்கள் அலுவல்களைக் கவனியுங்கள்; எங்கள் விஷயங்களில் தலையிட வேண்டாம்; தெரியாத விஷயங்களில் தலையிடாதீர்கள்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனா நேற்று சர்வதேச கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

சர்வஜன வாக்குரிமையின் ஐம்பதாவது வருடாந்தப் பூர்த்தியை முன்னிட்டு பொதுநலவரசு நாடுகளின் பாராளுமன்றச் சங்கத்தின் இலங்கைக் கிளை ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் கருத்தரங்கு நேற்று காலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. 43 நாடு

[6ம் பக்கம் பார்க்க]

### யாழ். வன்செயல்கள்

## 9 பொலிசாருக்கு எதிராக வழக்காட சாட்சியமுண்டு

### பொலிஸ் அதிபர் 'கிங்ஸ்லி' தகவல்

[யாழ்ப்பாணம்]

யாழ். வன்செயல்கள் தொடர்பான பொலிஸ் உயர் மட்ட குழுவின் விசாரணை, நேற்று முன்தினம் முடிந்தது. உயர்மட்டக்குழு இன்று கொழும்பு திரும்புகிறது.

விசாரணை பற்றி பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா நேற்றுத் தெரிவிக்கையில் ஒன்பது பொலிசாருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போதுமான சாட்சியங்கள் கிடைத்துள்ளன என்று கூறினார்.

யாழ்ப்பாணத்தில் 259 முறைப்பாடுகளும், சுன்னாகம், காங்கேசன்துறையில் 74 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 259 முறைப்பாடுகளில் 223 சம்பவங்கள் தீவைப்பு ஆகும். ஏற்கனவே எடுக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி 12 கோடி 60 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது. என்றும் பொலிஸ் அதியர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா தெரிவித்தார்.

## சம்பளம் இல்லை?

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர்கள் சிலருக்கு இம்மாத சம்பளத்தை வழங்கக்கூடாது என்று பல்கலைக்கழக சபை [கவுன்சில்] முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

[கவுன்சிலின்] இந்த முடிவை மிகவன்மையாக கண்டித்து யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் கழகம் நேற்று முன்தினம் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

யாழ் பல்கலைக்கழக கவுன்சிலின் இந்த முடிவு அநியாயமானது மட்டுமல்ல சட்டத்துக்கும் முரணானது என்றும் அந்தக் கண்டனத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (கு)

### பண்ணையில் பொலிஸ் வன்செயல்:

## நேரில் கண்ட சிங்களப் பெண்மணி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவிலுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அஞ்சல் நிலைய பொறுப்பதிகாரி திரு. கதிரவேலுவை சில பொலிஸ்அதிகாரிகள் பண்ணைக் கடலில் பிடித்துத்தள்ளுவதைத் தாம் கண்டதாக திருமதி ரம்யா லக்ஷ்மி காந்தி [25 வயது] என்ற சிங்களப் பெண்மணி பொலிஸ் உயர் மட்டக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

மண்டைதீவு ஒலிபரப்புக் கூட்டுத்தாபன விடுதியில் வசிப்பவரான திருமதி ரம்யா லக்ஷ்மி காந்தி தமது சாட்சியத்தில் கூறியதாவது:

கடந்த 2-6-1981 அன்று எனது மகள் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் நான் அங்கிருந்தேன். மண்டைதீவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பதிகாரி திரு. கதிரவேலு அங்கு வந்தார். என் மகள் ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதால் திரு. கதிரவேலு மண்டைதீவுக்குப்போகும்போது எம்மையும் அழைத்துச்செல்ல முடியுமா? என்று கேட்டேன் அவர் அதற்குச்சம்மதிக்கவே அவருடைய ஜீப்பில் நாங்கள் புறப்பட்டோம். சுமார் 2-20 மணியளவில் நாங்கள் பண்ணை பொலிஸ் விடுதிகளைக்கடந்தபொழுது இருவர் சிவில் உடையில் எங்களைத்தடுத்தார்கள்.

[6ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்!

ரூபா 1000 - லாபமடையுங்கள்

உங்கள் பயணத்திற்கு இதமான சொகுசு தரும்

வெஸ்பா ஸ்கூட்டர்களுக்கு

விசேட கழிவு வழங்கப்படுகிறது

ரூபா 1000/-

விசேட விலை: ரூபா 16500/. மட்டுமே

விரையுங்கள்.........

சி. சின்னத்துரை அன் கொம்பனி,

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7357

யாழ். மாவட்ட

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

வியாபாரிகளுக்கு

ஓர் நற்செய்தி

உங்களுக்குத் தேவையான சகலவிதமான இரும்புக்கம்பிகள், அளவு

[10MM] 3/8" [12 MM] 1/2"-[16 MM] 5/8"

பெருமளவில் இறக்குமதி செய்துள்ளோம்.

மற்றும் பல இறக்குமதிப்பொருட்களுக்கு

நாமே பிரதம ஏஜன்சிகளாகவுள்ளோம்.

சகல பொருட்களும் கொழும்பு விலைகளுக்கமைய, வியாபாரிகளுக்கு விற்பனைசெய்யப்படும்.

நேரடி இறக்குமதியாளர்

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1-2, மொம்ஸாக் பில்டிங்,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7130

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

குமரகோட்டம் கோண்டாவிலில் 3½ பரப்பு காணியும் சிறிய வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க. P இராசரத்தினம், நெட்டிலிப்பாய், கோண்டாவில். 0114

ஐந்து பரப்பு காணி உரும்பிராயில் தொடர்பு இந்திராசா இலக்க நட்சனில் தொலைபேசி இல 612. (0112)

யாழ்ப்பாணத்தில் குருசோ வீதியில் 226-ம் இலக்கத்தில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு வண்டனில்லம், இல 226, குருசோ வீதி, யாழ்ப்பாணம் 0126

### பயிற்சி

பிரபல கல்வி நிறுவனத்தில் நீளவண்டிங் [Rewinding] மூன்று மாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. ஆர்வமுள்ளவர்கள் 30-6-81 முன்பாக விபரங்களுக்கு எழுதவும். விளம்பர இல; 0101 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0101

## பொது முகாமையாளர் பதவி

**(தற்காலிகம்)**

எமது 18/6/81 திகதிய விளம்பரம் சார்பானது. மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 30-06-1981வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

செ. இராசநாயகம்
தலைவர்
பண்டத்தரிப்புப் பரிஷ்
ப.நோ. கூ. சங்கம். 0130

### தேவை

சோடாப்பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய கூலியாட்கள் தேவை. நேரில் வரவும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ். 31 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0107

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொழும்புத்துறையைச் சேர்ந்த கலஞ்செறி யேவான் எலியாஸ் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்யவர்
ரேச் எலியாஸ், வளவுபுரம், கொழும்புத்துறை.
மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல 3355

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன முக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாகப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்

தா. குலஞானம்
பதிவாளர்.

1981-ம் ஆண்டு ஆனி மாதம் 24-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. (0129)

## வெற்றிட விளம்பரம்

**மின்தறி இயக்குநர்கள்**

மேற்படி பதவிகளுக்கு எமது சங்க அங்கத்துவ நெசவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமைகள், வயது, அனுபவம், அங்கத்துவ இலக்கம், கிளை ஆகிய விபரங்களடங்கிய விண்ணப்பங்கள் 10-7-81 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

இங்ஙனம்
செ. விசுவலிங்கம்,
தலைவர்.

யாழ். மாவட்ட புடவை நெசவாளர்,
கூட்டுறவுச் சங்கம்,
10/1 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 0127

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்தவரும் சென்ற முத்துராசா நமசிவாயம் வெண் முத்து லெட்சுமியின் மரணசாதனமிலா மரணச் செத்தின் தத்துவக் காரரை நியமிப்பதற்கான விண்ணப்ப விடயத்தில்

முத்துராசா நமசிவாயம் திருவடிநிழல் உரும்பிராய் கிழக்கு, உரும்பராய்.
மனுதார்

வழ. இல தத்துவம்/3596
எதிராக

1. நமசிவாயம் பராசசேகரம்
2. நமசிவாயம் துரைரத்தினம்
3. நமசிவாயம் சத்தியசோதி

எல்லோரும் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
எதிர்மனுதாரர்கள்

மேலே கூறப்பட்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது அம்மன்றில் அதன் பிரகாரம் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது இவ்விண்ணப்பத்தில் அக்கறையுள்ள நபர்கள் எவர்களேனும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னராக இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் இறுதிக்கட்டளையாகக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 12-ம் திகதி.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி
ஒப்பம்
குலநாயகம்,
பதிவாளர்.

வரையப்பட்டது
ஒப்பம்
வ. மயில்வாகனம்,
மனுதாரின் சட்டத்தரணி
0123

### விற்பனைக்கு

யப்பானிலிருந்து எம்மால் தருவிக்கப்பட்ட ஸ்சு E. L. F 350 கட்டில் வான் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

**பிள்ளையார் ஸ்ரோஸ்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(0108

## நன்றி நவிலல்



24-04-81ல் நடைபெற்ற எமது திருமணத்தின் போதும் அதனைத் தொடர்ந்து கோப்பாய் தெற்கு பழைய வீதியில் மணமகன் இல்லத்திலும் புன்னாலைக்கட்டுவன் மணமகள் இல்லத்திலும் நடைபெற்ற வரவேற்பு உபசாரங்களிலும் கலந்து கொண்டு எம்மை வாழ்த்தியவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அன்பளிப்பு செய்தோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தனித்தனி நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்
க. பெரியதம்பியும் பாரியாரும்.
சவுதாம்ரன் சர்வகலாசாலை,
லண்டன்,
24-06-81.
0128

## இன்றையபலன்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் தலைதூக்கும், வார்த்தையில் வசீகரமும் வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மீனம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் நீண்டநாள் கொடுத்தகடன் இன்று மீண்டும் வந்து சேரலாம். பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படும். புத்திரர் புகழும் கிடைக்கும்.

சோதிடகாலநிதி
க. வேலுப்பிள்ளை

### யாழ். மாநகரசபை

# அங்கத்தவரின் முன்மாதிரி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிப்புக்குள்ளான யாழ் பொதுசன நூலக அபிவிருத்திக்கு, யாழ் மாநகரசபையின் அங்கத்தவர் திரு. வி. குமாரவேலு, தனது ஐந்து மாதப்படியான 2,251 ரூபாவை மாநகர முதல்வரிடம் கையளித்துள்ளார்.

நூல்நிலையம் அழித்து சேதப்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற யாழ் மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன், நூலக அபிவிருத்திக்கு முதல்வர் நிதி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக சபையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். இதற்கு 81 ம் ஆண்டு தொடக்கம் மாசாந்தப்படி பெறுத 9 உறுப்பினர்கள் தங்கள் படிகளை நூலக நிதியிக்சேர்க்குமாறு அதனைப கூட்டத்தில் முதல்வரை கேட்டுக்கொண்டனர்

திரு. குமாரவேலு நேற்று முன்தினம் காலை முதல்வரின் அலுவலக அறையில் வைத்து மேற்படி பணத்தை முதல்வரிடம் வழங்கினர். (மா)

### இறக்குமதியில் ஈடுபட்ட

# கூலியாட்களுக்கு பணம் வழங்கப்படவில்லையாம்

## அமைச்சருக்கு மகஜர்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை துறைமுகத்தில் அண்மையில் அரிசிக்கப்பல் ஒன்றின் இறக்குமதி வேலைகளை மேற்கொண்ட தனியார் வர்த்தகஸ்தாபனம், இறக்குமதி வேலைகளில் ஈடுபட்ட கூலியாட்கள், வர்த்தைகள், மோட்டார் இழுவைப் படகுகளுக்குரிய கூலிப் பணத்தை வழங்கவில்லை என்று உணவு கூட்டுறவு அமைச்சருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண துறைமுக வர்த்தை பொதுச் சேவைச் சங்கமும், தோப்புக்காடு முருகன் வர்த்தை பொதுச் சேவைச் சங்கமும் இணைந்து அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில், "கடந்த மாதம் காங்கேசன் துறைக்கு வந்த "கோட்டா பேளியன்' என்னும் கப்பலிலிருந்து அரிசி மூடைகளை இறக்குமதி செய்த இவ்வர்த்தக ஸ்தாபனம் உணவு இலாகாவிலிருந்து மொத்த கூலிப் பணத்தின் தொண்ணூறு வீதத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் தங்கள் சங்கங்களுக்கு மேலும் நாற்பதினாயிரம் ரூபாய் வரை தருமதியுள்ளதென்றும், அமைச்சர் இவ்விடயத்தில் தலையிட்டு, பணத்தைப் பெற்றுத்தரும்படியும் கோரி மகஜரைச் சமர்ப்பித்துள்ளன.

இவ்வர்த்தக ஸ்தாபனம் கடந்த பல வருடங்களின் பின்னர் முதற் தடவையாக கப்பல் இறக்குமதி வேலையில் ஈடுபட்டதென்பது குறிப்பிடத்தக்கது

இம்மகஜரின் பிரதிகள், கப்பற்றுறை அமைச்சர், உணவு ஆணையாளர், உணவு கூட்டுறவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுன்னாகம் தெற்கு காலஞ்சென்ற முத்துக்குமாரு பொன்னம்பலம் என்பவரது மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

முத்துக்குமாரு பொன்னம்பலம் கைம்பெண் நல்லம்மா சுன்னாகம் தெற்கு சுன்னாகம்
மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 95

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கட்டளைப்படி
சு வ. கணேசன்
பதிவாளர்

1981ம் ஆண்டு ஆனி மாதம் 23ம் நாளன்று தேதியிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
(0125)

நாளை மல்லாகம்

## சதா சகாயமாதா திருநாள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சதா சகாயமாதா திருநாள் நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கின்றது.

சதா சகாய மாதாவின் நவநாட்கள் வாரம் தோறும் புதன்கிழமை நடைபெற்றுவந்தன நாளை வருடாந்த விழா ஆடம்பரமாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் 'பலிக்களம்' தொலைக்காட்சியும் நாளை இரவு இடம்பெறவிருக்கின்றது. (மா)

அமெரிக்காவிலிருந்து

## 30 000 தொன் கோதுமை

[கொழும்பு]

பி. எல். 480 உடன்படிக்கைப்பிரகாரம் இலங்கைக்கு அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் கோதுமையில் 30,000 தொன் செப்டம்பர் மாதம் இலங்கைவந்துசேரவுள்ளது. [லே]

மணி வாக்கு

நேர்மையான மனமபடைத்தவனுக்கு சட்டம்தான் தேவை! முட்டாள்களுக்குச் சேவிக்கை தான் கடவுள்.

— பிளேட்டோ

# நமது நோக்கு

## பாராளுமன்ற ஆட்சி முறை

இன்று கொழும்பில் நடைபெறும் சர்வசன வாக்குரிமை பொன்விழாவின் முக்கிய அவாவாய் "பாராளுமன்ற ஆட்சிமுறை" பற்றிய கருத்தரங்கு.

நம்பது நாடுகளிலிருந்து 150 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்ற சரித்திரப் பிரசித்திபெற்ற மகாநாடு இது.

சர்வசன வாக்குரிமையைப் பொன்விழாவென்றால் இலங்கைக்குப் பெருமை அளிக்கும் விழாவென்பதை விளக்கத் தேவையில்லை.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் சர்வசன வாக்குரிமை பெற்ற ஐந்தாவது நாடு இலங்கை. அந்தவகையில் அதற்கேற்ற சாதனைகள் இங்கு இல்லாமலில்லை.

இங்கும் அங்கும் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றபோதும் உலக நாடுகள், குறிப்பாக ஆசிய நாடுகளை ஒப்பிட்டால், நேற்றிருந்த ஆட்சி இன்று கவிழ்வதும், சதிப்புரட்சியும், ஜனாதிபதிகள் கொலை செய்யப்படுவதும், கொலை முயற்சிக்குள்ளாவதும், நாட்டைவிட்டோடுவதும், பாராளுமன்றம் சடுதியில் கலைக்கப்படுவதும் எங்கள் நாட்டில் இடம்பெறும் சம்பவங்களல்ல!

பாராளுமன்ற ஆட்சிமுறை இப்பொன்விழாவாகிய மங்கல நிகழ்ச்சியில் செவ்வனே ஆராயப்படுவது பலன்தரவல்லது. கருத்தரங்குகள் களியாட்ட விழாவாகப்போவது சாதாரண உண்மை. ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் இக்கட்டத்தில் இது விரும்பத்தக்கதல்ல.

பாராளுமன்ற ஆட்சிமுறை இன்றைய ஆட்சியில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் கண்டுள்ளது. அதுவே நிர்வாக ஜனாதிபதி ஆட்சியென்ற முக்கிய மாற்றமாகும். இதுபற்றி நேற்று நடந்த கருத்துப் பரிமாறல் பற்றி எமக்கு செய்தி எதுவும் கிட்டவில்லை.

இன்று நடைபெறும் கருத்துப் பரிமாறல், இங்கு ஆதிவாசவுள்ள தமிழினத்தின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு வழிகாண உதவுமா? எமக்கு இன்று தேவையானது ஏட்டுச் சுரைக்காய் அல்ல; 34 வருட பாராளுமன்ற ஆட்சி தமிழ்ச் சமூகத்தின் சிறுபான்மை பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாத நிலையில் இந்த அழகான விழவுக்கு அமங்கலமான முறையில் மேடேறியிருக்கிறது.

எனவே ஆலோசனை எதுவும் கூறிக்கொள்ளவேண்டும் ஜனாதிபதி நிர்வாக ஆட்சியில் பாராளுமன்ற எதிர்க்கட்சி 'வேலையற்றிருப்பதும்' கவனத்துக்குரியது; விவாதத்துக்கெடுக்கப்படவேண்டியது.

இலங்கைக் குழு மட்டுமல்ல, மற்றைய நாடுகளின் பிரதிநிதிகளும் இவ்விடயம் பற்றிப் பழுதற்ற நிதானமான கருத்துக்கள் உதவுவாராக!

வேண்டுமானால் இன்று இங்கு நிலவிவருக்கும் அசம்பாவிதங்கள் பற்றியும் மனம்விட்டு பேசினால் ஒரு விவேகமான தீர்வுக்கு வழி பிறக்கலாம்; இதில் எவ்வித அகௌரவமுமில்லை.

200 மைலுக்கப்பால் இங்கு கொதிவலி கொடுக்கும் வைப்புண்ணை கொழும்பு மாநகர் கண்ணாடியில் பார்க்கலாம்; நாடு திரும்பியும் பிரதிநிதிகள் டி.வி.யில் பார்க்கலாம். அது முக்கியமல்ல. பாராளுமன்ற ஆட்சியின் இருப அம்ச மக்க — தமிழ்பேசும்மக்கள் தொகையின் சிறுபான்மை — தனித்துவமாக முதலாம் பிரஜைகளாக — தம் முன்னோர் வாழ்ந்த முறையில் சுதந்திர நாட்டில் எவ்வாறு வாழலாம்?

இது கட்டாயமாக ஆராயப்படவேண்டிய விடயம்; ஆழமாகவுங்கூட.

## தொழிற் பாதுகாப்பு

ஜெனிவாவில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) மாநாடு தொழிலாளர் பாதுகாப்புப் பற்றி திடமான தீர்மானங்கள் எடுத்திருப்பதாகச் செய்தி கூறுகின்றது.

முதலாளித்துவ நாடுகளில்தான் தொழிற் பாதுகாப்பு அவசியமென்ற கொள்கை மலையேறிவிட்டது. போலந்தில் இன்னும் பல சோஷலிச நாடுகளில் தொழிலாளர் தக்க பாதுகாப்பின்றி, சுதந்திரமின்றி கஷ்டப்படுகின்றனர்.

இந்தப் பின்னணியில் இவ்வருட ஜெனிவா மாநாடு முக்கியத்துவமானது.

அரசியல், இனம், மதம், ஆண்பெண் பாகுபாடு, பழிவாங்கல் காரணமாகப் பதவி நீக்கம்செய்வது எவ்வகையிலும் சர்வதேச தொழிற் சட்டத்துக்கு முரணானதென்று இவ்வருட மாநாடு வற்புறுத்தியிருக்கிறது.

எங்கள் நாட்டின் பிரதிநிதிகளும் இதிற் கலந்துகொண்டனர். கடந்த ஒரு வருடமாக வேலைநிறுத்தத்தால் இன்னும் பாதிக்கப்பட்ட தொழிலாளர் கதிக்கு இவ்வருட மாநாட்டின் உறுதியுள்ள சட்டதிட்டங்கள் உதவுமா? தோட்டத் தொழிலாளருக்கு விடிவு காண உதவுமா?

மாநாட்டு (ILO) சட்டங்கள் தொழிலாளர் வாழ்க்கைக்கு வரப்பிரசாதமென்பதில் எமக்கு எள்ளளவுசந்தேகமுமில்லை. ஆனால் (தெய்வத்தின் ஆலைகள் God's mills) போல் அவை மெதுவாகவே திரிகின்றன.

எங்கள் நாட்டில் சென்ற வாடம் வேலையிழந்திருக்கும் பல்லாயிரக்கணக்கானோர் ஒரு வருடத்துக்கு எவ்வளவு துன்பமும் தயருடும் அங்களும் உயிருடன் இருக்கின்றார் என்பது இக்கால வரலாற்றின் அற்புதமாகும்.

அரசியல், இனப் பாகுபாடு, பழிவாங்கல் எவ்வகையிலும் இடம்பெறுவண்ணம் இச்சர்வதேசஸ்தாபனம், உலகநாடுகளின் கிளைகள்மூலம் சட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும். தொழிற்சங்கங்கள் இவ்வித வேறுபாட்டில் தனிப்பட்டு இயங்குவது சட்டவிரோதமான செயலெனப் பிரகடனப்படுத்த வேண்டும்.

# "கடைகள் எரிவதாக இன்ஸ்பெக்டரிடம் கூறியபோது அவர் 'நீர் ஏன் தலையிடுகிறீர்' என்றார்"

### பொலிஸ் விசாரணைக்குழு முன் சுன்னாகம் பட்டினசபை ஆணையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களின் போது சுன்னாகம் பட்டினசபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் பாதிப்புக்குள்ளானதால் சுமார் ஆறரை லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சுன்னாகம் பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. பொ. பாலலிங்கம், சுன்னாகம் பட்டினசபைக் காரியாலயத்தில் நடைபெற்றுவரும் உயர்மட்ட விசாரணைக் குழுமுன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சுன்னாகத்தில் நடைபெற்ற தீவைப்பு, கொள்ளை, கொலைகள், கடை உடைப்பு சம்பந்தமாக கொழும்பிலிருந்துவந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைசெய்து வருகின்றது.

சுன்னாகம், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் சென்ற மாதம் 31ம் திகதி முதல் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக உதவிப்பொலிஸ் அதிபர்களான திரு. ஸ்டீவன், திரு. பெனட் பெரேரா தலைமையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் திரு. சர்வானந்தா, திரு. வீரக்கோன், திரு. ஞானப்பிரகாசம், திரு. கிருஷ்ணராசா ஆகியோர் விசாரணைசெய்து வருகின்றனர்.

திரு. பாலலிங்கம் தொடர்ந்து தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாவது;

"சுன்னாகம் நவீன சந்தைக் கடைகளுக்கு சென்ற 31 திகதி இரவு பொலிசார் நெருப்புவைத்துவிட்டார்கள் என்று சந்தைக் காவல்காரர் என்னிடம் வந்து சொன்னதும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொறுப்பதிகாரியிடம் 'கடைகள் எரிகின்றன. இவற்றைப் பாதுகாக்கமுடியாதா' என்று நான் கேட்டபொழுது அவர் 'நீங்கள் ஏன் இதில் தலையிடுகிறீர்கள்' என்று பதிலளித்தார். பின்பு 'மறுநாள் என்ன பாதுகாப்புத் தரப்போகின்றீர்கள்' என்று கேட்டபொழுது அவர் 'இனிமேல் ஒன்றும் நடக்காது' என்றார்.

அன்றிரவு தனியார் கடைகள் எரிந்தபொழுது, பொதுமக்களே தீயணைத்துக்கொண்டிருந்தனர். பொலிசார் எவரும் தீயணைக்க முன்வரவில்லை. இந்நேரத்தில் திரும்பவும் இன்ஸ்பெக்டரிடம் நான் சென்று 'பாதுகாப்பேன் என்று சொன்னீர்கள் இப்படித்தான் பாதுகாக்கின்றீர்களோ' என்று சொன்னதற்கு அவர் "ஏது காத்துக்கொள்வதற்கு எனக்கு வழிதெரியும்" என்றார். அடுத்த நாள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு இதுசம்பந்தமாக தெரிவித்தேன்". (மா)

# மூவாயிரம் ரூபா பெறுமதி உணவுமுத்திரைகள் களவு!

(சுழிபுரம்)

சுழிபுரத்திலுள்ள தனியார் கூட்டுறவுக் கடையில் மூவாயிரம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் களவாடப்பட்டுள்ளதாக சங்கானை உதவி அரசாங்க அதிபரிடம் கூப்பன் கடை உரிமையாளர் திரு. க. குமாரசாமி முறையிட்டுள்ளார்.

அந்த கடைக்கு அருகாமையில் பழைய பாத்திரங்கள் ஒட்டும் தொழிலைச்செய்து வந்த ஒருவர்மீது தமக்கு சந்தேகம் என்றும் களவுபோன நாள்முதல் சம்பந்தப்பட்ட தொழிலாளி கடையைத் திறக்காது வெளியூர் சென்றுவிட்டதாகவும், பூரணவிசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவரை கைதுசெய்து, வழக்குத் தொடருமாறு சங்கானை பொலிஸ்நிலையத்தில் கடை உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

புதிய உணவுமுத்திரைகளை பாவனையாளருக்கு வழங்க வைத்திருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றது. திருட்டுப்போன முத்திரைகளுக்குரிய பணத்தை கட்டி புதிய முத்திரைகளைப்பெற்று உரியவர்களுக்கு முத்திரையை வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு உதவி அரசாங்க அதிபர் கூப்பன்கடை உரிமையாளரை பணித்துள்ளார்.

## புலமைப் பரிசில்கள்

(புலோலி)

யாழ் மாவட்டத்தில் சமூகநலச்சேவைத் திணைக்கள மத்திய நிலையங்களில கடமையாற்றும் திறமைவாய்ந்த பெரும்பாக உத்தியோகத்தர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூநலச் சேவை மத்திய நிலையங்களின் சிறந்த நிர்வாகம், பராமரிப்பு, சுற்றுடல் பேணல், நிலையவளவில் அதிக மரம் நடும் திட்டம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை சிறந்தமுறையில் மேற்பார்வை செய்தல் போன்றவற்றை அடிப்படையாகவைத்தே திறமைவாய்ந்த பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் கருத்து

## எவருக்குமே நிகழக்கூடாது

கடந்த 31ம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற வன்செயல்களைப் பார்வையிடுவதற்காக கடந்த 16.06.81ல் நான் யாழ் நகரின் பல்வேறு இடங்களுக்கும் சென்றேன். பார்வையிட்டேன். உடன் திரும்ப வேண்டி இருந்ததின் காரணத்தினால் தங்கள் காரியாலயத்திற்கு மட்டும் வரக் கிடைக்கவில்லை. மன்னிக்கவும் இருப்பினும் தங்கள் பத்திரிகை பிறந்தார் இடத்தில் அச்சிட்டு மீண்டும் வெளிவருவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன்.

யாழ் நகருக்கு நேர்ந்த கதி எந்த ஊருக்கும், எந்த இன மக்களுக்கும் நடைபெறக்கூடாது என்று முதற்கண் இறைவனிடம் வேண்டுகின்றேன். யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு ஏற்பட்ட துன்பநிலை காரணமாக யாழ்நகரமே சோபையிழந்து, பொலிவிழந்து வெறிச்சோடிக்கிடந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பொதுமக்களைக் காக்கவேண்டிய காவல் துறையினரே இதை வெறிகொண்டு செய்துள்ளார்கள் என்பதை அறிந்து வேதனைப்படுகின்றேன், வெட்கப்படுகின்றேன்.

நடந்தது நடந்துவிட்டது. அதை நினைப்பதில் பிரயோசனமில்லை. தாங்கள் தங்கள் பத்திரிகைமூலம் சிறு நிதி சேகரிக்க வேண்டும். அந்நிதி நூற்றில் ஒருபங்காவது அழிந்த வாசிகசாலையின் வளர்ச்சிக்காக பங்காற்ற வேண்டும்.

ஏ. எச். ஏ. அலீஸ்
பிரதான வீதி,
காத்தான்குடி.

## ஆயிரத்தில் ஒரு சம்பவம்!

(உடுப்பிட்டி)

வீதிகளில் அலைந்து திரிந்த பிச்சைக்காரர் ஒருவருக்குத் திடீர் மரியாதையும், வரவேற்பும் அளிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நெல்லியடியில் நடந்துள்ளது.

பிரஸ்தாப பிச்சைக்காரர், மாதக்கணக்கில் குளிக்காது அசுத்தமாக நெல்லியடி வீதிகளில் நடமாடியபோது துர்நாற்றம் வீசியது. இதை அவதானித்த இப்பகுதி வர்த்தகர்களும், இளைஞர்களும் அப்பிச்சைக்காரரை வலிந்து வாகனம் ஒன்றில் வைத்து வலுக்கட்டாயமாக ஏற்றிச் சென்று கடலில் குளிப்பாட்டி வசனைத்திரவியங்களைப் பூசி சாரம் சேட்டுக்கள் அணிவித்து வேண்டிய உணவும் அளித்து திரட்டிய பணமும் கொடுத்து அவரது சொந்த ஊருக்குப் பயணம் அனுப்பி வைத்தனர்.

அப்பிச்சைக்காரர் புத்தாடை அணிந்து அழகாக வாகனமொன்றில் ஏறிய போது கோலாகலமாக விடைகொடுத்து அனுப்பப்பட்டார்.

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வட்டு வீரபத்திர சிவன் கோவில் வருடாந்த ஆனி உத்தர உற்சவம் நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் பகல் விசேட பூஜைகளும், ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

தினமும் கதாப்பிரசங்கமும், விசேட மௌனவாத்தியக்கச்சேரிகளும், சுவாமி நகருவலம் வருதலும் இடம்பெறும். அடுத்த மாதம் 7-ம் திகதி தேர் உற்சவமும், 8-ம் திகதி தீர்த்தோற்சவமும், 9-ம் திகதி பூங்காவனமும் நடைபெறும். [வெ]

## காலரா பீதி

[திருகோணமலை]

திருகோணமலைப் பகுதியில் சீனன் குடாவிலும், ஆண்டான் குளத்திலும் இருவர்கள் காலரா வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இம் மாதம் முதல் திகதி அங்கே வசிப்பவர் ஒருவர் காலராவால் இறந்துள்ளார். மேலும் திருகோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் ஆறுபேர் காலராவால் பீடிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த மாதம் இப்பிரதேசத்தில் ஆறு பேர் காலராவால் இறந்தும், 40 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றும் குணமடைந்துள்ளனர். (சி. தீ.)

தமிழக–கேரள எரிசாராய ஊழல்

# மத்திய அரசு கமிஷனை கலைக்க வேண்டும்

## அதிமுகவின் 12 தோழமைக்கட்சிகள் சென்னையில் கூடி தீர்மானம்

சென்னை, ஜூன் 25 தமிழக - கேரள அரசுகளுக்கு இடையே இடம்பெற்றதாகக் கூறப்படும் எரிசாராய ஊழல் தொடர்பாக விசாரணைசெய்வதற்காக மத்தியஅரசு நியமித்துள்ள கமிஷனை உடன் கலைக்குமாறு தமிழகத்தைச் சேர்ந்த 12 கட்சிகள் மத்திய அரசைக் கோரியுள்ளன.

காந்திகாமராஜ் காங்கிரஸ், லோக்தள், மார்க்ஸிய கம்யூனிஸ்ட், குடியரசுக்கட்சி, தொழிலாளர்கட்சி உட்பட இந்த 12 கட்சிகளும் நடந்த தேர்தலில் அ. தி. மு. க. வுக்கு ஆதரவாகப் போட்டியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று சென்னையில் கூடி மத்திய அரசைக் கோரும் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றினர்.

0 மத்திய அரசு கமிஷன் நியமித்துள்ளமை

0 மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான நல்லுறவைப் பாதிக்கும்

0 மாநிலஅரசு நிர்வாகத்தில் மத்திய அரசு தலையிடுவதாக அமையும்.

0 அரசியல் நோக்கம்கொண்டது

0 இந்திரா காங்கிரஸ் அல்லாத அரசைப் பழிவாங்கும் நோக்கம்கொண்டது.

காந்திகாமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் தலைமையில் சென்னையில் நடைபெற்ற இக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானத்திற்கு ஆதரவாக இம்மாதம் 12ந் திகதி முதல் தமிழகம் எங்கும் கூட்டங்களை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது (இ)

## இன்றைய பலன்

ஆனிமாதம்12ம் திகதி
வெள்ளிக்கிழமை
(26 - 6 - 81)

**மேடம்:** கண்திடைப்பு வேலை நடைபெறும், கால்நடைகளினால் நஷ்டமுண்டு. குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமற்றதாக இருக்காது, மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும், மட்டமான தினம்.

**இடபம்:** ஏக்கத்தின் சாயல் தாக்கும், எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும், நிதானம் வேண்டும்.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும், வெளியிடத்திலிருந்தும் மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம், பணவரவுக்கு இடமுண்டு.

**கடகம்:** நினைத்தது நடக்காது, நிம்மதி பறக்கும். நெடும்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும், அதிக சிந்தனையைத் தவிர்.

**சிங்கம்:** மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கலாம், இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும், தெய்வவழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

**கன்னி:** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும், அரசியல் வாதிகளாயின் அதிக அவதானத்துடன் நடந்து கொள்ளவும்

**துலாம்:** காதல் விவகாரங்கள் தலை தூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், சாஸ்திர வழியால் பொருள்வரவுக்கு இடமுண்டு, பெரியோர்கள் ஆதரவு பெருகும், கண்ணியமான தினம்.

**விருச்சிகம்:** அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், சிறிய விடயத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள், உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும், அடக்கம் வேண்டும்.

**தனுசு:** பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு, இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

**மகரம்:** பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமான நிலை தென்படும், சுற்றாடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும், சுகபோக நாள்.

**கும்பம்:** பயன்தரும் பயணமொன்று இன்று மேற்கொள்ளப்படலாம், பழைய நினைவு

(2ம் பக்கம் பார்க்க)

யாழ். வன்செயல்கள்:

# நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு மக்கள் குழுத் தலைவர் பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கம், செரட்டேரியன் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்வந்துள்ளனர்.

பாதிப்புக்குள்ளானவர் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஏற்ற தஸ்தாவேஜுகளுடன் சமுகந்தருமாறு மேற்படி குழுவினர் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் செனட்டர் திரு. எஸ். நடேசன் மியூனிசி நஷ்டஈடுகுறித்து வழக்குத் தொடருவதற்கான சட்ட ஆலோசனைகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ளாரெனத் தெரிகிறது.

சுன்னாகம் வர்த்தகர் சமூகமும் வழக்குத்தாக்கல் செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
(மா)

## ராஜதந்திரிகள் வெளியேற்றம்

லுசாக்கா, ஜூன் 25 ஸாம்பியாவில் அமெரிக்க சார்பு அரசாங்கமொன்றை அமைக்க முயற்சிசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இரு சிரேஷ்ட அமெரிக்க ராஜதந்திரிகளை அங்கிருந்து வெளியேறும்படி ஸாம்பிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் உடன் ஸாம்பியாவை விட்டு வெளியேறும்படி அரசாங்கம் பணித்துள்ளது.

இவ் இரு ராஜதந்திரிகளும் ஸாம்பியாவில் அமெரிக்க அரசியல்விவகாரங்களுக்குப் பொறுப்பாகவிருந்தனர். இவர்கள் இருவரும் ஸாம்பியாவில் அமெரிக்க சார்பு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சி. ஐ. ஏ.க்கு ஆதரவாகவிருந்தனரென்றும் கூறப்படுகிறது.
(வெ)

## ஜனாதிபதி தேர்தல் ஜூன் 24ல்

தெஹ்ரான், ஜூன் 25 ஈரானில் இம்மாதம் 24ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி ஜனாதிபதி பானிசதரை வெளியேற்றியபின்னர் நியமிக்கப்பட்ட மூவர் நிர்வாகக்குழு இம்மாதம் 24ம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடத்துவதென்று முடிவுசெய்தது (இ)

அரபு நாடுகள்

# அணு ஆயுதம் தயாரித்தால் இஸ்ரேலும் அதில் ஈடுபடும்

## மோஷே தயான் கூறுகிறார்

இஸ்லாமாபாத், ஜூன் 25 அரபு நாடுகள் அணு ஆயுதங்களைத் தயாரித்தால் இஸ்ரேல் வெறுமனே பார்த்துக் கொண்டிராது. உடனடியாக இஸ்ரேலும் அணு ஆயுதங்களைத் தயாரிக்க ஆரம்பிக்கும்.

இவ்வாறு இஸ்ரேலிய முன்னாள் வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷே தயான் தெரிவித்துள்ளார்

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

அணு ஆயுதங்களைப் பற்றி சிந்திக்காமலே இஸ்ரேல் ஏழு யுத்தங்களைக் கண்டிருக்கிறது இப்போது நிலைமை மாறிவிட்டது

ஈராக்கில் சதாம் ஹுசெய்னும் லிபியாவில் கேர்ணல் கடாபியும் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்ய முயற்சி செய்துவரும்போது இஸ்ரேல் மட்டும் ஏன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். (இ)

# பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யாது

## அதிபர் ஹக்யு எஸ். அமைச்சரிடம் உறுதி

இஸ்லாமாபாத், ஜூன் 25 பாகிஸ்தானுக்கு அணு ஆயுதங்களை உற்பத்திசெய்யும் நோக்கம் எதுவும் கிடையாது.

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் விநியோகம்செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இஸ்லாமாபாத் வந்திருந்த அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சரிடம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (இ)

யாழ். வன் செயல்கள்:

# "முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட திட்டங்களாகும்"

## இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)
"அப்பாவி மக்கள் அவர்களுடைய பிரதேசத்திலேயே தாக்கப்பட்டதும், கடைகளும், வீடுகளும் கொள்ளையடித்துக் கொளுத்தப்பட்டதும், எல்லாவற்றுக்கும் மேலாக ஏறத்தாழ ஒரு லட்சம் அரிய நூல்களைக் கொண்ட யாழ். பொதுநூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதும், மத்திய கல்லூரி நூல் நிலையம் துவம்சம்செய்யப்பட்டதும், யாழ் மக்களின் ஒரே தினசரியான 'ஈழநாடு' அலுவலகம் எரிக்கப்பட்டு, அச்சு இயந்திரங்கள் தாக்கப்பட்டதும், வழிபாட்டு ஸ்தலங்கள் தாக்கப்பட்டதும், வாழ்ப்பாணத்தில் உள்ள கிட்டத்தட்ட எல்லாப் புத்தகக் கடைகளும் கொளுத்தப்பட்டதும், மகாத்மா காந்தி, தமிழ்மறை தந்த திருவள்ளுவர், தேசியப் பெருங்கவி சோமசுந்தரப் புலவர் முதலான பெருந்தலைவர்களின் சிலைகள் நொறுக்கப்பட்டதும் நாகரிகம் படைத்த எவரும் செய்யத் துணியாத, வெட்கித் தலைகுனியக்கூடிய இழிசெயல்களாகும்."

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது:

"இந்தத் திட்டமிட்ட வெறித்தனம் தமிழ்மக்களின் கலை, கலாசாரங்களையும், அறிவுப் பொக்கிஷங்களையும் அழித்தொழிக்கும் கபடநோக்குடன் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட செயற்பாடாகும் என்றே கருதவேண்டியுள்ளது யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட செய்தி கேட்டதும் அதிர்ச்சியால் தம்மின்னுயிரை இழந்த பன்மொழிப் புலவர் தாவீது அடிகளின் மரணம் தமிழ் இதயங்களின் கொதிப்பையே சுட்டுகிறது.

இந்த மனிதத்தன்மையற்ற வெறிச் செயல்களைக் கண்டிக்கும் அதேவேளையில் சகலவிதமான வன்முறைப் போக்குகளையும் நாம் உறுதியாக நிராகரிக்கின்றோம். இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளும், பிணக்குகளும் துப்பாக்கிமுனையில் தீர்க்கப்படக்கூடியவை அல்ல என்பதையும், தேசிய ஐக்கியமும் வன்முறை மூலமும், ஆயுதப் பணிகளின் அட்டகாசங்கள் மூலமும் காதுகாக்கக்கூடியதல்ல என்பதையும், அதேபோல உரிமைகள் மறுக்கப்படும் மக்களின் எழுச்சி பலாத்கார வெறியாட்டங்கள் மூலம் நசுக்கப்படக்கூடியவை அல்ல என்பதையும் வலுவுடன் வலியுறுத்த விரும்புகிறோம்.

"நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப் பிரச்னைக்கு உடனடியான ஜனநாயகத் தீர்வு காணப்படவேண்டுமென்றும், இதுவே எல்லாக வன்முறைகளும் தலைதூக்காது இருப்பதற்கான ஒரே ஒரு உத்தரவாதம் என்றும் நாம் மீண்டும் வற்புறுத்துகின்றோம். பிரச்னைகளுக்கு இணக்கமான தீர்வுகாண உகந்தமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இதற்கு முதலில் (1) நடைபெற்ற வன்முறைச் செயல்கள் குறித்துச் சர்வதேச மட்டத்தில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டும், (2) குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் கடுமையான தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும், (3) பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முழுமையான நஷ்டஈடு வழங்கப்படவேண்டும், (4) யாழ். நூலகமும், பண்பாட்டு நிலையங்களும் உட்பட அழிக்கப்பட்ட அனைத்தும் புனர் நிர்மாணிக்கப்பட வேண்டும், (5) இன வெறியைத் தூண்டும் அதிகார வர்க்க உறுப்பினர்கள், அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து அகற்றப்படவேண்டும்.

"இம்முறையும் இனவெறி திட்டமிட்டுத் தூண்டப்பட்ட போதிலும் சகோதரச் சிங்கள மக்கள் இதை நிராகரித்தமையும், பொய் வதந்திகளால் தவறாக வழிநடத்தப்பட்ட மறுத்தமையும் ஆரோக்கியமான, ஆறுதல் தருகின்ற, நம்பிக்கையூட்டுகின்ற ஒரு வளர்ச்சிப் போக்காகும். இதற்காக இந்த மக்களுக்கும், இவர்கள் மத்தியிலுள்ள அனைத்து ஜனநாயகச் சக்திகளுக்கும் நமது நன்றியையும், நன்மதிப்பையும் தெரிவித்துக்கொள்கின்றோம்"

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராமராவ்-அஞ்சலிதேவி
ராஜ சேவை

நாசம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
தங்கை

5-வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மனோகரா தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்)
ROCKY
(Action Film)

வின்ஸர் இன்னும் சிலதினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
ரிஷி மூலம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
★ சிவாஜி ★ ஜெயகணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
சட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30
7-00, 9-45
Krakatowa East of Java
(Color Scope-Thrill and Suspence)
From: 27th June '81
A long awaited film that has come to smash all the previous record collection.
BRUCE LEE........?

# மன்னாரில் 24 மணிநேர மின்வெட்டு!

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் 24 மணித்தியால மின்சாரவெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் மன்னார் பட்டினம் கடந்த இரு தினங்களாக இருளில் மூழ்கியுள்ளது!

மன்னார் பட்டினசபையால் மன்னார் பட்டினம் முழுவதும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுவந்தது. இங்குள்ள 7 ஜெனரேட்டர்களில் 5 ஜெனரேட்டர்கள் முற்றாகப் பழுதடைந்துள்ளன மிகுதி இரு ஜெனரேட்டர்களும் அடிக்கடி பழுதடைந்துவருகின்றன மன்னார் பட்டினம் முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது.

24 மணி நேரம் மின்சாரவெட்டு இடம்பெறுவதால் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலை இருளில் மூழ்கியுள்ளது. இரவுநேரத்தில் அவசரசிகிச்சைகள் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல தொழிற்சாலைகளும் ஆலைகளும் மூடப்பட்டுள்ளன.

மின்சார விநியோக சீர்கேடு குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று ஐ. தே. கட்சிப் பிரமுகர் ஒருவர் தமது நிருபரிடம் கவலை தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் பட்டணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் கச்சேரியிலும், படமாளிகைகளிலும் தனி ஜெனரேட்டர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## சமய தீட்சை

(கிளிநொச்சி)

பரந்தன் முரசுமோட்டை சேத்துக்கண்டி ஆலயத்தில் நூற்றுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கும், பெரியார்களுக்கும் சமய தீட்சை அளிக்கப்பட்டது.

ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தினால் மேற்படி வைபவம் நடாத்தப்பட்டது. இளைப்பாறிய ஆசிரியர் திரு. இளையதம்பி ஆலய வளர்ச்சி பற்றியும் கிராமங்களின் வளர்ச்சிபற்றியும் உரையாற்றினார்.

சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா சமய நூல்களையும், விபூதிப் பொதிகளையும் அன்பளிப்புச் செய்தார் மகாதேவா ஆச்சிரம நிர்வாகி திரு. எஸ். கணேசபிள்ளை இந்த இளைஞர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். கிராம மக்களால் அன்னதானம் வழங்கப்பட்டது. (லொ)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-ராதிகா
ரத்தத்தின் ரத்தம்

சுன்னாகத்தில்

## பாதித்தகடைகளுக்கு மாற்று ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் அண்மையில் நிகழ்ந்த தீவைப்பு, அழிபாடுகளுக்குள்ளான சுன்னாகம் பட்டினசபையின் சந்தைக்குள் அமைந்திருந்த கடைகளின் மதிப்பீடு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா எனக் கணிக்கப்பட்டுள்ளதென்றும், கடைகளை நடத்திய உரிமைக்காரர்களுக்குத் தொடர்ந்து வியாபாரம் செய்வதற்கு மாற்றிட வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளதாகவும் சுன்னாகம் பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு, புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திலேயே கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன முற்றிலும் எரிந்த பகுதி இடத்திலே நவீன முறையில் கட்டிடம் ஒன்று, நகர நிர்மாணத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பாதிப்புக்குள்ளான யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கம் மற்றும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களுக்கான கட்டிடங்களும் முற்றிலும் புதிய முறையில் கட்டப்படவிருப்பதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிந்தும், அழிபாடுகளுக்குமுள்ளான சில கடைகள் புனருத்தாரணம் செய்யப்படுகிறது. (மா)

## "துப்பாக்கி, குண்டாந்தடிகளுடன் வந்து துரத்தினார்கள்"

### புத்தகக்கடைக்காரர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கதவுகளை பூட்டிவிட்டு ஒரு அறைக்குள் இருந்து கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோது துப்பாக்கி, குண்டாந்தடிகள் சகிதம் எமது புத்தகநிலையத்திற்குள் பின்னுடையில் புகுந்த 4 பேர் எமது புத்தக நிலையத்திலிருந்த ஷோகேஸ்களை உடைத்துவிட்டு எம்மை ஓடும்படி துரத்தினர்.

உயர் பொலிஸ் விசாரணைக் குழுமுன் சாட்சியமளித்த யாழ். பஸ் நிலையத்திலுள்ள ராஜன் புத்தகசாலை உரிமையாளர் கந்தசாமி நடராசா (3? வயது) மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி விசாரணை வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

க. நடராசா தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

கடந்த மாதம் 31ம் திகதி இரவு சுமார் 9 மணியளவில் எமது புத்தக நிலையத்தில் ஒரு அறைக் கதவிலிருந்து கொண்டு வியாபாரக்கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தோம் அப்போது எமதுகடைப் பேலிப்பக்கத்திலும் பஸ் நிலையத்திலும் கூக்குரல் கேட்டது. அப்போது நீளக்காற்சட்டை, பெனியன் அணிந்த ஒருவர் துவக்குடனும் சாரம், சேட் அணிந்த மூவர் குண்டாந்தடிகளுடனும் எமது புத்தக நிலையத்திற்குள் புகுந்து சோக்கேஸ்களை உடைத்தனர் எங்களை ஓடும்படி சிங்களத்தில் பேசி விரட்டினர். நாங்கள் பயத்தில் வெளியே ஓடி சைக்கிளில் திருநெல்வேலியிலுள்ள எமது வீட்டிற்கு ஓடிவிட்டோம்.

இம்மாதம் 1-ந் திகதி காலை புத்தக நிலையத்திற்குத் திரும்பி வந்து பார்த்தபோது அது முற்றாகத் தீயிடப்பட்டிருந்தது.

எமது புத்தக நிலையம் தீயிடப்பட்டதால் 2 லட்சத்து 19 ஆயிரத்து 500 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்கள் மட்டும் 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது அன்று வியாபாரம் செய்த பணம் 4500 ரூபா ரொக்கமாக இருந்தது.

40 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியுள்ள தளபாடங்கள் மற்றும் விற்பனைப் பொருட்களும் அன்று அங்கு இருந்தன. [லொ]

## இன்று உற்சவாரம்பம்

(ஊர்காவற்றுறை)

சரவணை கொட்டாங்காடு ஞானவைரவர் அலங்காரத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது எதிர்வரும் 4-ந் திகதி பொங்கல் விழாவும் 5-ந் திகதி சங்காபிஷேகமும் நடைபெறும்.

தினமும் இரவு முத்தமிழ் மாமணி திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகத்தின் வில்லிசைக்கச்சேரி இடம்பெறும்.

## வீடுடைத்து பொருட்கள் களவு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கருகாமையிலுள்ள வீடு, நள்ளிரவு நேரத்தில் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கச் சங்கிலி, மோதிரம், வெளிநாட்டுச் சேலைகள் ஆகிய 8000, ரூபா பெறுமதியுள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி வீட்டுச்சொந்தக்காரரான கந்தசாமி இராதாகிருஷ்ணன் சங்கானைப் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். சுந்தரநாதன் விசாரணை நடத்தினார்.

ராணி- யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
100வது வெற்றித்திருநாளை முன்னிட்டு மூன்று ரொக்கப் பரிசுகள்.
19-06-81 முதல் 26-06-81 வரை தீ படத்தைப் பார்ப்பவர்களுக்கு இப்பரிசுகள் கிடைக்கும். டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள்
முதல் பரிசு 3000-00, இரண்டாம் பரிசு 1500-00,
மூன்றும் பரிசு 500-00
★ ரஜனிகாந் ★ ஷோபா இணைந்து வழங்கும்
தீ
மகாராஜா-சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
தென்னகத்தில் 100 தினங்கள் ஓடி வெற்றி முழக்கமிடுவது தீ
காணத் தயாராகுங்கள்

யாழ். வன்முறைச் சம்பவம்:

# குவைத்பத்திரிகை வெளியிட்ட தகவல்

குவைத், ஜூன் 23
எதிர்க்கட்சி தேர்தல் கூட்டம் ஒன்றல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பலியானதை அடுத்து சிவில் உடையணிந்த பொலிசார் யாழ்ப்பாணத்தில் பல கடைகளையும், தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயம், யாழ். எம். பீயின் இல்லம் மற்றும் பல வீடுகள், வாகனங்களைத் தீக்கிரையாக்கினர்.

இவ்வாறு 'குவைத் டைம்ஸ்' பத்திரிகையின் இம்மாதம் 6ம் திகதி இதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில்நடந்த வன்செயல்கள், மாவட்டசபை தேர்தல் நடவடிக்கைகள் என் செயல்களால் கூட்டணியின் வேண்டுகோளை அடுத்து 2ம் திகதி இடம்பெற்ற ஊர்த்தால், அவசரகாலச் சட்ட அமுல் பற்றி அப்பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த மற்றொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிறிலங்கா பிரஜைகளும் தமிழர்களும் யாழ்ப்பாணத்தில் கலவரம் செய்தனர் என்ற தலைப்புடனும் ஒரு செய்தி அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

### ஜே.ஆர். கண்டனம்

''யாழ்.மாவட்டத்தில்இனந்தெரியாத நபர்கள் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளைத்தாம் கண்டிப்பதாகவும், இந்தப் பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது இருக்கும் சட்டங்கள் போதுமானவையாக இல்லாததால் விரைவில் புதிய சட்டங்கள்கொண்டுவரப்பட்டு பயங்கரவாதிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 12ம் திகதி பத்திரிகையில்

யாழ். நகரில் வன்செயல்கள் இடம்பெற்ற தினங்களில் பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பு சென்ற விமானத்தில் பயணம்செய்தவர்களை பிரயாணத்தின்முன்னர் ஆயுதப்படையினர் பரிசோதனை செய்யும்போது எடுத்த படம் ஒன்றுடன் மற்றொரு செய்தி இம்மாதம் 12ம் திகதி 'குவைத் டைம்ஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மீது திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலைமையிலான அரசு வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது என்றும் இலங்கையிலிருந்து தமிழ்மக்களை விரட்டியடிக்கச் சிங்களம் பேசும் பெரும்பான்மை மக்கள் முயற்சிசெய்கின்றனர் என்றும் சென்னையில் உள்ள சர்வதேச தமிழ்க் கலாச்சாரச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளதாக அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. [இ]

## மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு
- சிங்கப்பூர்
- பாரிஸ்
- நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி) ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

**உலகின் எப்பாகத்துக்கும்**

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

**விமான டிக்கட்டுகள்**

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ **நைஜீரியன் விசா**

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள பிரபல்யமான

MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன்

ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான

எங்களை நாடுங்கள்

**மக்கினொன்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்,**

8, பருத்தித்துறை வீதி, - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

## பண்ணையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்கள் பொலிசாரைப்போல் காணப்பட்டார்கள். நான் முன் ஆசனத்தில் திரு. கதிரவேலுவுடன் அமர்ந்திருந்தேன் ஜீப் சாரதி சபாரத்தினம் ஜீப்பை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றார் சற்றுத்தூரத்தில் மேலும் நான்கு பேர் ஜீப்பை நிறுத்தும்படி சைகை காட்டினர். அவர்கள் ஷேட்டுகளும் காக்கி காற்சட்டைகளும் அணிந்திருந்தனர். ஜீப் நிறுத்தப்பட்டது. இருபொலிசார் பைப்துண்டுகளை வைத்திருந்தனர் இன்னொருவர் கிறிஸ் கத்திவைத்திருந்தார். ஜீப் நிறுத்தப்பட்டு சாரதி இறங்கியதும் அந்த நான்கு பொலிசாரும் அவரைக் கைகளால் தாக்கினார்கள். அவர் ஊர்காவற்றுறை பக்கமாக ஓடினார். பொலிசார் அவரைத் துரத்திச் சென்று பிடித்து இழுத்து வந்தனர். பின்னர் நான் சிங்களப் பெண்ணா அல்லது தமிழ்ப் பெண்ணா என்று கேட்டனர். நான் சிங்களப் பெண் என்றால் தமிழர்களுடன் என்ன செய்கிறேன் என்று வினவினார்கள். ஒருவர் அச்சமயம் கிறிஸ்கத்தியை என் நெஞ்சில் வைத்து என்னை இருக்கும்படி கட்டளையிட்டார். நான் எனது 11 மாதக் குழந்தையுடன் இருந்ததால் என்னை ஒன்றும் செய்யவேண்டாம் என்றும் என்னைப் போக விடும்படியும் கெஞ்சினேன். நான் சிங்களப் பெண்ணாய் இருப்பதால் போகவிடலாம் என்று ஒரு பொலிஸ்காரர் மற்றவர்களிடம் கூறினார். பின்னர் திரு. கதிரவேலுவைச் சுட்டிக்காட்டி அவர் யார் என்று என்னிடம் கேட்டார் ஒருவர். அவர் வானொலி நிலையபொறுப்பதிகாரி என்று நான் கூறினேன். அவர்கள் அவரை கீழ்த்தரமாகப் பேசி வெளியில் இழுத்தனர். பைப்களால் தாக்கினார்கள். அதன்பின் என்னை ஜீப்பில் போகவிட்டார்கள். அதேசமயம் திரு. கதிரவேலுவை அவர்கள் கடலில் தள்ளுவதை நான் கண்டேன், இது நடந்து கொண்டிருக்கும் போது அருகாமையில் உள்ள குற்றுச்சுவர் மீது சேர்ட்டும் காக்கி களிசானும் தரித்த ஏராளமானவர்கள் அமர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டேன் அதன் பின் நான் எனது தகப்பனரின் இல்லத்துக்குச்சென்றேன் அங்கு சென்றபின் இராணுவ கப்டன் ஜயசுந்தராவுக்கு டெலிபோன் செய்து நடந்தவற்றைக் கூறினேன் சிறிது நேரங்கழித்து திரு.கதிரவேலு நடந்தே அங்கு வந்து சேர்ந்தார். என் நெஞ்சில் கத்தியைவைத்தவரையும் கத்திவைத்திருந்த இன்னொருவரையும் நேரில் கண்டால் அடையாளம் காட்ட முடியும். பொதுமக்களை இப்படியாக இவர்கள் ஏன் தாக்கினார்கள் என்பது எனக்குவிளங்கவில்லை.

### விற்பனைக்கு

தனிப்பாவிப்பிலும் நல்ல நிலைமையிலும் உள்ள K 125 Suzuki 81 Sri 2380 இடமாற்றம் காரணமாக உடன் விற்பனைக்கு உள்ளது. த. சிவசுப்பிரமணியம், உதவி தபால் அதிபர், முருகன் வீதி, கிழக்கு உரும்பிராய். 0105

### பயிற்சி

றேடியோ - டெலிவிசன் எயர்கொண்டிசனிங் - வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். 29 - 6 - 81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி மோம்சாக் கட்டிடம் 11, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 0100

# இப்படியும் நடக்கிறது

நேற்று முன்தினம்காலை ஒரு பெரியவர் ''ஈழநாடு'' அலுவலகத்துக்கு வந்தார்.

அவர் கையில் திருவருள்மிகு சித்ரகூடச் சித்தி விநாயகர் வருடாந்த திருப் பெருவிழா அழைப்பிதழ் இருந்தது.

'இது ஒரு பெரிய புண்ணியத் திருவிழா. எப்படியும் பத்திரிகையில் போடவேண்டும்'' — வருத்தமாகக் கூறினார்.

''கோவில் விஷயம். நிச்சயம் வெளிவரும்'' நம்பிக்கை ஊட்டினோம்,

நன்றி கூறிப்போன அந்தப் பெரியவர்; சில நிமிடங்களில் திரும்பி வந்து இவ்விதம் கேட்டுக்கொண்டார்;

''நாளைக்கோ அல்லது நாளை மறுதினமோ பேப்பரில் போட்டு விடாதிங்க. ஏனன்டா நாளைக்கு அட்டமி. நாளை மறுதினம் நவமி. சனிக்கிழமையையும் விட்டு ஞாயிற்றுக் கிழமை பேப்பரில் போட்டால் தான் நல்லது.........''

செய்தி எப்படியாவது பத்திரிகையில் வெளிவராதா என்றுதான் பொதுவாக எதிர்பார்ப்பார்கள். ஆனால் இப்படியும் நடக்கிறது.

° ° °

இரண்டு நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் இது:-

அப்பொழுது நேரம் சுமார் ஏழரை மணியிருக்கும்.

தொலைபேசி அலறுகிறது!

''பட பட பட பட்... என்று வெடிச்சத்தம் கேட்கிறது. தொடர்ந்து 'டொம் டொம்' என்று பெரிய சத்தம் கேட்கிறது. செக்பண்ணிப் பாருங்க ..'' —அவ்வளவுதான்.

ஒன்றும் புரியவில்லை. யாழ். மத்திய பஸ் நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றோம்.

''எங்களுக்கும் சத்தம் கேட்டதுதான், டவுனில் அப்படி ஒன்றும் இதுவரை இல்லை...... எதற்கும் செக்பண்ணிப்பாருங்க .... '' என்கிறார்.

யோசனைதான். சில செக்கண்டுகளில் மீண்டும் தொலைபேசி அலறுகிறது.

''... ... ... .... ... ...''

''எனக்கும் சத்தம் கேட்டதுதான். விசாரித்துப் பார்த்தேன் ஒரு திருமண வீட்டில் வெடிகொளுத்தியிருக்கின்றார்கள் அவ்வளவுதான் ... '' — இப்படிக் கூறியவர் யாழ். எம், பி. யோகேஸ்தான்.

சாதாரணமாக இரவில் சின வெடிச்சத்தம் கேட்டாலே போதும் ... கொடூரமான அந்த இரவுகளை இலேசில் மறக்கமுடியுமா?

—ஊடுருவி

# ''யாழ். நூல்நிலையத்தை புனரமைப்புச் செய்யவும்''

## ஜனாதிபதிக்கு த. தொ. ச. கூட்டணி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக சேதத்துக்குள்ளான யாழ்ப்பாண பொது ஜன நூலகத்தையும், குறிப்பாக சிறுவர்களுக்கான பகுதியையும் காலம் தாழ்த்தாது புனரமைப்புச் செய்து தருமாறு ஜனாதிபதிக்கு தமிழ்த்தொழிற்சங்கக்கூட்டணி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது சேதத்துக்குள்ளாகிய கட்டடங்கள் அனைத்தையும் உடனடியாகப் புனரமைத்து, திருத்திக் கொடுத்தால், அது புண்பட்ட தமிழ் உள்ளங்களுக்கு ஆறுதலாக அமையுமென எதிர் பார்ப்பதாகவும் மேற்படி தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. சிகந்தையா குறிப்பிட்டுள்ளார் (மா)

## எங்கள் விடயம்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களைசேர்ந்த 115 பாராளுமன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:

''யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்த வன்செயல்களால் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 300 வன்செயல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. 14 பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

''பிரிட்டிஷ் எம். பிக்கள் எமக்கு அனுப்பிய தந்திகளிலும், கடிதங்களிலும், சாதாரண சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தமிழ் மக்கள் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இவர்களுக்கு நான் கூறுகிறேன். எங்கள் விஷயங்களில் தலையிடாதீர்கள்.

''யாழ். அசம்பாவிதம் தற்செயலாக நிகழ்ந்ததே. பெறுமதிமிக்க யாழ். பொது சன வாசிகசாலையும் எரிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இப்பொழுது விசாரணை நடைபெற்றுவருகிறது.

'வன்செயல்களை அடக்க, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் சட்டங்களைத்தொடர்பு படுத்தியே, இங்கு தலை தூக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## சத்திரசிகிச்சை வசதி

[புலோலி]

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் உடற்கூற்றுச் சத்திர சிகிச்சைப் பிரிவு செயற்பட ஆரம்பித்துள்ளது. இச்சத்திரசிகிச்சைப் பிரிவில் சகல உடற்கூற்றுச் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100/36/81 P. O. Box 49. Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707 Registered as News Paper at the General Post Office, Sri Lanka